<u>சாட்சிய வாக்குமூலம்</u>

# மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தென்காசி.

## OS. No. 13 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வா.சா | : | 3 | நாள் | : | 16.04.2025 |
| பெயர் | : | ரவிசந்திரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர்/ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16th day of April 2025.

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை:</u>

முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். தமிழில் எழுத, படிக்க தெரியும். முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு நான் தான் சொன்னேன். நீதிமன்றத்திற்கு வாதி அழைத்ததன் பேரில் வந்தேன் என்றால் சரியல்ல. சாமி என்பவர் தான் அழைத்தார். எனக்கு வழக்குரை தெரியும். எனக்கு வாதியை மூன்று முறை நீதிமன்றத்திற்கு வந்த பின்னர் தெரியும். வாதியின் மனைவி பெயர் தெரியாது. வாதியின் குழந்தைகள் பெயர் தெரியாது. நான் ஆர்எஸ் கோல்டு பீடியை 7,8 வருடங்கள் பிடிக்கிறேன். எனக்கு 25 வயதில் இருந்து புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளது. அந்த பீடியின் வெளியே பச்சை கலர் லேபிள் ஒட்டப்பட்டிருக்கும். நம்பர் 1 ஆர்எஸ் பீடியில் என்ன கலர் சுற்றப்பட்டிருந்தது என்று தெரியாது. வாதி நிறுவன பீடி என்ன உறையில் சுற்றப்பட்டிருக்கும் என்று தெரியாது. அது என்ன கலர் பாக்கெட்டியில் இருக்கும் என்றால் கட்டாக கொடுப்பார்கள்

கவனித்தது இல்லை. வாதியின் ஆர்எஸ் பீடியின் கலர் ரோஸ் கலரில் இருக்கும் என்றால் தெரியாது. ஆர்எஸ். கோல்டு பீடியின் விலை என்னவென்றால் 10 ரூபாய். ஆர்எஸ் கோல்டு பீடி கட்டில் எத்தனை பீடிகள் உள்ளது என்று தெரியுமா என்றால் 13 அல்லது 14 பீடிகள் இருக்கும். பிரதிவாதியின் நம்பர் 1 ஆர்எஸ் பீடி கட்டில் எத்தனை பீடிகள் இருக்கும் என்றால் அதே போல் 14 பீடிகள் இருக்கும். நம்பர் 1 ஆர்எஸ் பீடி கடைசியாக எப்போது உபயோகப்படுத்தினீர்கள் என்றால் சுமார் 5 மாதத்திற்கு முன்பு பயன்படுத்தினேன். வாதியின் பீடி உறைக்கும், பிரதிவாதியின் பீடியின் உறைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 10, 11 க்கும் வேறுபாடு உள்ளதா என்றால் பார்த்தால் வேறுபாடு தெரியாது. அருகில் அருகில் வைத்து பார்த்தால் எழுதில் வேறுபாடு உள்ளது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.16 18:29:11 +0530